# Asylum Advice

## சாதகமான முடிவுக்குப் பின்

# பிரிவு 4 யு: சாதகமான முடிவுக்குப் பின்

புகலிடத்திற்கான உங்கள் கோரிக்கையை பரிசீலித்த பின்னர் ஐக்கியராச்சியத்தில் “தங்க அனுமதி” கிடைத்தால் என்ன நடக்கும் என்பதை இப் பிரிவு விளக்குகிறது அடுத்து என்ன நடக்கும் என்பதை பின் வரும் தகவல்கள் விளக்குகிறது

## 4A.1 என்னுடைய மாதிரியான அந்தஸ்தின் அர்த்தம் என்ன?

Home Officė மூன்று விதமான அந்தஸ்தினைக் கொடுக்கலாம்

**1.** அகதி அந்தஸ்து
நீங்கள் அகதியாக அங்கீகரிக்கப் பட்டால் அதன் அர்த்தம் Home Officė அகதிகள் உடன்படிக்கையின் அகதிகளுக்கான வரைவிலக்கணத்தை திருப்தி செய்கிறீர்கள் என முடிவு செய்துள்ளது. அத்துடன் உங்களுக்கு கீழ்காணும் காரணங்களில் ஏதாவது ஒன்றுக்காக உங்களுக்கு தீங்கு விளைவிக்கப்படும் என்பதற்கான வலுவான ஆதாரங்களைக் கொண்ட அச்சம் உள்ளது என்பதை ஏற்றுக் கொள்கிறது உங்கள் இனம், உங்கள் சமயம், உங்கள் தேசியம், குறிப்பிட்ட சமூகக் குழுமம் ஒன்றில் உங்கள் அங்கத்துவம். அல்லது உங்கள் அரசியல் கருத்துகள்

ஆரம்பத்தில் Home Office தொடர்ந்து ஐந்து வருடகாலத்துக்கு தங்குவதற்கு அனுமதி அளிக்கும். (ஐக்கிய ராச்சியத்தில் தங்குவதற்கான உரிமை) உங்கள் உயிர்த் தகவல்கள் மற்றும் Home Office இல் உள்ள ஆவணங்கள் நீங்கள் அகதியாக ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒருவர் என்பதை உறுதி செய்யும்.

தற்சமயம் நடைமுறையில்உள்ள அகதிகள் கொள்கை கூறுவது என்னவென்றால் 5 வருட அகதி அந்தஸ்து அல்லது மனிதாபிமான பாதுகாப்பிற்குப் பின் □கால வரையின்றுத் தங்குவதற்கான அனுமதிக்கு விண்ணப்பிக்கலாம். ( நிபந்தனைகள் அற்ற அனுமதி இது பொதுவாக தீர்வு என அழைக்கப்பட்டும்.)

இருப்பினும் நீங்களோ அல்லது உங்களில் தங்கியிருக்கும் எவரேனுமோ கிரிமினல் குற்றத்திற்கு தண்டிக்கப் பட்டால் இது மறுக்கப் படலாம்.

**2.** மனிதாபிமான பாதுகாப்பு
இதன் அர்த்தம் என்னவென்றால் நீங்கள் அகதி அந்தஸ்துக்கான நிபந்தனைகளை திருப்தி செய்யவில்லை என Home Office முடிவு செய்து ஆனால் ஆனால் நீங்கள் நாட்டிற்குத் திரும்பினால் உங்களுக்கு பாரிய தீங்கு நேரிடும் என்ற அபாயம் உள்ளது என நம்புவதற்கு வேறு காரணங்கள் உண்டு என்பதை ஏற்றுக் கொள்ளுவது. இதற்கான காரணங்கள்

- மரணதண்டனை ∴ நிறைவெற்றுதல்

- சட்ட விரோதமாக கொல்லுதல்
- சித்திரவதை
- மனிதப் பண்பு அற்ற மற்றும் இழிவாக நடத்துதல்
- தண்டனை அல்லது உள்நாட்டு அல்லது சர்வதேசப் பிணக்குளின் விளைவாக ஏற்படும் கட்டற்ற வன்முறைச் சூழலலால் ஏற்படும் ஆபத்து

உங்களுக்கு மனிதாபிமான பாதுகாப்பு வழங்கப் பட்டால் தொடர்ந்து ஐந்து வருடகாலத்துக்கு தங்குவதற்கு அனுமதி அளிக்கப் படும். (ஐக்கிய ராச்சியத்தில் தங்குவற்கான உரிமை) மனிதாபிமான அடிப்பயையில் தங்க அனுமதிக்கப் பட்டவர் என்பதை உங்கள் ஆவணங்கள் உறுதி செய்யும்.

தற்சமயம் நடைமுறையில்உள்ள குடிவரவுக் கொள்கை கூறுவது என்னவென்றால் 5 வருட மனிதாபிமான பாதுகாப்பிற்குப் பின் “கால வரையின்றித் தங்குவதற்கான அனுமதிக்கு விண்ணப்பிக்கலாம். ( நிபந்தனைகள் அற்ற அனுமதி )

3.தற் துணிவின் அடிப்படையில் தொடர்ந்து தங்குவதற்கு அனுமதி
அகதி அந்தஸ்தோ அல்லது மனிதாபிமானப் பாதுகாப்போ வழங்குவதற்கான நிபந்தனைகளை நீங்கள் திருப்தி செய்யவில்லை என Home Office முடிவு செய்து ஆனால் தற்காலிகமாக உங்களுக்கு அனுமதிவழங்க வேறு பிரத்தியோக காரணங்கள் உள்ளன என ஏற்றுக் கொண்டால் “தற் துணிவின் அடிப்படையில் தங்குவதற்கு அனுமதி’ வழங்கும். (தங்குவதற்கான உரிமை)

தற் துணிவின் அடிப்படையிலான அனுமதி வழக்கமாக ஆகக் கூடுதல் ஒருமுறை இரண்டரை வருடங்களுக்கு (30 மாதங்கள்) வழங்கப்படும். உங்கள் அனுமதியை நீடிக்குமாறு விண்ணப்பிக்கலாம். பத்து வருடங்களுக்கு பின் காலைவரையற்ற அனுமதிக்க விண்ணப்பிக்கலாம்.

## 4A.2 எனக்கு அகதி அந்தஸ்து வழங்கப்படவில்லை என்றால் நான் மேன் முறையீடு செய்லாமா?

உங்களுக்கு 12 மாதங்களுக்கு மேலான மனிதாபிமானப் பாதுகாப்பு அல்லது தற்துணிவின் அடிப்படையில் தங்க அனுமதி வழங்கப்பட்டு ஆனால் அகதி அந்தஸ்துக்காக பலமான காரணங்கள் உண்டு என நீங்கள் நம்பினால் Home Officė இன் முடிவுக்கு எதிராக மேன் முறையீடு செய்யலாம். இது தரம் உயர்த்தும் மேன் முறையீடு எனப்படும். உங்கள் சட்டப்பிரதிநிதியுடன் இது பற்றிப் ஆலோசிக்க வேண்டும். இதில் உங்களுக்கு வெற்றி கிட்டுமானால் அகதி அந்தஸ்து வழங்கப்படும்.

## 4A.3 எனது அனுமதிக் காலம் முடிவடையப் போகின்றது என்றால் என்ன நடக்கும்

உங்கள் தங்கமிட அனுமதி முடிவடையும் தருவாயில் Home Officė இல் மேலதிக விண்ணப்பம் ஒன்றினைச் செய்ய வேண்டும். உங்கள் அனுமதி முடிவடைய 28 நாட்கள்

முன்னதாக விண்ணப்பத்தை சமர்ப்பிக்க வேண்டும்.

உங்கள் அனுமதி காலாவாதி ஆகுவதற்க முன்பதாக உங்கள் விண்ணப்பம் கிடைக்கப் பெற வேண்டும். உங்கள் அனுமதி காலாவாதி ஆகுவற்கு முன்னர் Home Office உங்கள் விண்ணப்பத்தின் மீது முடிவு செய்யவில்லை என்றால் முன்பு இருந்த உரிமைகள் தொடர்ந்தும் இருக்கும். உங்கள் அனுமதி காலாவாதியான பின்னர் உங்கள் விண்ணப்பம் Home Office க்கு கிடைக்கபட்டால் ஐக்கிய ராச்சித்தில் சட்டவிரோதமாக தங்கும் ஒருவராக கணிக்கப் படுவீர்கள். இதன் அர்த்தம் வேலை செய்தற்கான உரிமை கொடுப்பனவுகள் மற்றும் உங்கள் அனுமதியுடன் சம்பத்தப்பட்ட உரிமைகள் அனைத்தையும் இழக்க நேரிடும். இது நடக்கும் பட்சத்தில் உடனடியாக சட்ட ஆலோசனை பெற வேண்டும். Home Office இன் குடிவரவு இணையதளத்தில் இது தொடர்பான தகவல்களைக் காணலாம்

உங்களுக்கு 'தற்துணிவின் அடிப்படையில் தங்க அனுமதி" வழங்கப்பட்டிருந்தால் மேலதிக காலம் கேட்டு "தங்குவதற்க மேலதிக அனுமதி: விண்ணப்பிக்க வேண்டும். இக்கொள்கைக்கு தகுதியானவராக இருக்கம் வரை மேலதிக அனுமதி வழங்கப்படும். மொத்தமாக பத்து வருடங்கள் அனுமதி கிடைக்கும் வரை இதனை நீங்கள் செய்ய வேண்டும்.மேலதிக அனுமதிக்கு விண்ணப்பித்தல் தொடர்பான தகவல்களை Home Office இன் இணையதளத்தில் https://www.gov.uk/browse/visas-immigration காணலாம். இதற்குப் பின்னர் நீங்கள்'காலவரையில்லாமல் தங்க அனுதிக்கு' விண்ணப்பிக்கலாம் உங்கள் விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப் பட்டால் உங்கள் ஐக்கிய ராச்சியத்தில் தங்கும் அனுமதிக்கு காலவரை இருக்காது

முக்கியமான குறிப்பு காலக்கிரமத்தில் குடிவரவுக் கொள்கையில் ஏற்படும் மாற்றங்கள் பற்றி அறிந்திருப்பது முக்கியம். Home Office இன் இணையதளத்தை https://www.gov.uk/browse/visas-immigration தொடர்ந்து பார்வையிடுவதன் மூலம் இதனைச் செய்யலாம்.

## 4A.4 எந்த விதமான ஆவணங்கள் எனக்குத் தரப்படும்.?

உயிர்த் தகவல்கள் கொண்ட அட்டை
உயிர்த் தகவல் கொண்ட வதிவிட அனுமதி உங்களுக்கு கிடைக்கும் (உயிர்த் தகவல்கள் கொண்ட அட்டை) இந்த ஆவணம் உங்கள் ARC யைப் போன்றது ஐக்கிய ராச்சியத்தில் நீங்கள் தங்க, வேலை செய்ய மற்றும் படிக்க உரிமைஉள்ளது என்பதை இந்த உயிர்த் தகவல்கள் கொண்ட அட்டை நிரூபிக்கும் உங்கள உயிர்த் தகவல்கள் கொண்ட அட்டையை அடையாள அட்டையாக பாவிக்கலாம். ஐக்கிய ராச்சியத்தில் வங்கிக்கணக்கு ஒன்றிற்காக விண்ணப்பிக்கையில் இதனைக் காட்ட வேண்டியிருக்கும். எப்பொழுதும் உங்களுடன் இதனை எடுத்துச் செல்ல வேண்டும் என்ற தேவை இல்லாவிட்டாலும் ஐக்கியராச்சியத்தில் உங்களுக்கு உள்ள உரிமைகளை ஊர்ஜிதப்படுத்தும் தேவை ஏற்படின் இதனைக் காட்ட வேண்டும்.

உங்கள் உயிர்த் தகவல்கள் கொண்ட அட்டை பாதுகாப்பான தபால் மூலம் உங்களுக்கோ அல்லது உங்கள் சட்டப்பிரதிநிதிக்கோ அனுப்பப் படும். உங்கள் குடும்ப

அங்கத்தவர் ஒவ்வொருவருக்கும் ஒரு அட்டை வழங்கப் படும்.

உங்கள் உயிர்த் தகவல்கள் கொண்ட அட்டை, உங்கள் பெயர், பால். பிறந்த திகதி மற்றும் இடம் உங்கள் புகைப்படம், உங்கள் குடிவரவு அந்தஸ்து, உங்கள் அனுமதி எப்பொழுது காலாவாதி ஆகும், உங்கள் உரிமைகள் பற்றிய விபரங்கள் மற்றும் உங்கள் கையெழுத்து ஆகியவற்க் காண்பிக்கும். உங்கள் கைவிரல் அடையாளங்கள் மற்றும் முகப்பிரதி உயிர்த் தகவல்கள் கொண்ட அட்டையின் கணணிச் சீவலில் பதிந்து இருக்கும்

முக்கிய குறிப்பு உங்கள் அட்டையில் உள்ள விபரங்கள் அனைத்தையும் சரி பார்த்தல் வேண்டும். தவறுகள் இருப்பின் Home Office க்கு உடனே தெரியப் படுத்த வேண்டும்

ஏதேனும் பிழைகள் இருந்தால் கார்டு கிடைத்த 10 நாட்களுக்குள் தெரிவிக்க வேண்டும் . தவறினால் நீங்கள் மீண்டும் மனு கோரவேண்டும் , மற்றும் பயோ மெட்ரிக் கார்டு க்கான பணம் செலுத்தவேண்டும் . நீங்கள் மினஞ்சல் BRPError@homeoffice.gsi.gov.uk அனுப்பலாம் . கீழ்க்கண்டவைகளை உங்கள் மினஞ்சலில் சேர்க்கவும்

. உங்கள் பாஸ்போர்ட் எண .

உங்கள் பயோ மெட்ரிக் குடிஉரிமை எண

. உங்கள் கோப்பு குறிப்பு எண்

. உங்கள் தொலைபேசி எண.

தெளிவாக எங்கு பிழை உள்ளது

எனது உயிர்த் தகவல்கள் கொண்ட அட்டையை தொலைத்தால் ?
உங்கள் உயிர்த் தகவல்கள் கொண்ட அட்டை தொலைந்து போனால் அல்லது களவாடப்பட்டு விட்டால் உற்விவகாரப் பணியகத்துக்கு உடனடியாகத் தெரிவிக்க வேண்டும். உங்கள் உயிர்த் தகவல்கள் கொண்ட அட்டையை Home Office இரத்துச் செய்ய வேண்டும் சட்டத்தின் பிரகாரம் உங்கள் அட்டை இரத்துச் செய்யப் பட்டு மின் அஞ்சல் மூலம் Home Office க்கு தெரியப்படுத்த வேண்டும். BRPLost@homeoffice.gsi.gov.uk.

உங்கள் மின் அஞ்சலில் கூறவேண்டியது

- உங்கள் முழுப் பெயர்
- உங்கள் பிறந்த திகதி
- உங்கள் தேசியம்
- உங்கள் கடவுச்சீட்டு இலக்கம்

- உங்கள் உயிர்த் தகவல்கள் கொண்ட அட்டை இலக்கம்
- உங்கள் வழக்கு எண்
- உங்கள் தொடர்பு விபரங்கள் அத்துடன்
- எங்கு எப்போது எப்படி இது தொலைந்தது அல்லது களவாடப்பட்டது

களவு அல்லது காணாமல் போனது பற்றி பொலிஸில் முறைப்பாடு செய்ய வேண்டும். அத்துடன் பொலீஸ் அறிக்கையையும் குற்றப்பதிவ இலக்கத்தையும் உடனடியாகப் பெற்றுக் கொள்ள வேண்டும். உங்களது அட்டை திருடபட்டால் உடனடியாக காவல் துறைக்கு புகார் செய்ய வேண்டும் . அது தவறிபோனால் நீங்கள் இணையதளத்தின் மூலம் அறிவிக்க வேண்டும் ----அநேக இடங்களில் £3.95 செலுத்த வேண்டி இருக்கும் . அதனை நீங்கள் வங்கி அட்டை மூலம் செலுத்தவேண்டும்

ஒரு பிரதியீடு அட்டைக்கு விண்ணப்பிக்க வேண்டும். .இது தொடர்பான தகவல்கள் Home Office இன் இணையதளத்தில் https://www.gov.uk/biometric-residence-permits காணலாம்.

தேசிய காப்புறுதி இலக்கம்
உங்கள் விரிவான நேர்காணலின் ஒரு பகுதியாக தேசிய காப்புறுதி இலக்கத்திற்காகவும் நேர்காணப்பட்டிருப்பீர்கள் உங்கள் தேசிய காப்புறுதி இலக்கமானது உங்களுக்கு தனித்துவமான ஒன்று தேசிய காப்புறுதி மற்றும் சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின் நிர்வாகத்திற்கு ஐக்கிய ராச்சித்தில் இது உபயோகிக்கப் படும்.உங்கள் வாழ்நாள் பூராகவும் ஒன்றையே வைத்திருப்பீர்கள் நீங்கள் செலுத்தும் வரியும் தேசிய காப்புறுதிப் பங்களிப்புகளும் உங்கள் பெயரில் பதிவு செய்யப்படுவதை இது உறுதி செய்கிறது ஓய்வூதியம் மற்றம் வேலைகள் வருமான மற்றும் சுங்கவரித் திணைக்களங்களுடன் தொடர்பாடலில் இவ்விலக்கம் உபயோகிக்கப் படுகிறது.

வழமையாக 16 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு தேசிய காப்புறுதி இலக்கம் வழங்கப் படுகிறது.

புகலிட நேர்காணலின் போது உங்களில் தங்கியிருக்கும் வயது வந்தவர்கள் NINO வுக்காக நேர்காணப்பட மாட்டார்கள் .இதனால் இவர்களுக்கு தானகவே NINO இலக்கம் கிடைக்காது ஓய்வூதியம் மற்றம் வேலைகள் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டால் அவர்கள் உங்களில் தங்கி இருப்பவர்களுக்கு தேசிய காப்புறுதி இலக்கத்தை ஒழுங்கு செய்வார்கள்

நீங்கள் வேலை செய்ய ஆரம்பிக்க உள்ளீர்கள் அல்லது சுய தொழிலில் ஈடுபட உள்ளீர்கள் என்றால் 0845 600 0643 என்ற இலக்கத்தில் Job Centre Plus உடன் தொடர்பு கொள்ள வேண்டும்

நீங்கள் சலுகைகளுக்கு விண்ணப்பக்கின்றீர்கள் என்றால் ஓய்வூதியம் மற்றும் வேலைகள் திணைக்களம் (DWP Job centre) உங்களின் நேர்காணலின் போது தேசி பாதுகாப்பு

படிவத்தை உங்களுடன் இணைந்து நிரப்புவார்கள். இது னுஊஜ 1ட என அழைக்கப் படும் உங்களுக்கு தேசிய காப்புறுதி இலக்கம் தரப்பட வேண்டும் என இது கோரும்.

தேசிய காப்புறுதி இலக்கத்திற்கான நேர்காணலுக்கு உங்களுக்கு அழைப்பு வந்தால் உங்கள் அடையாளத்தையும் ஐக்கிய ராச்சியத்தில் வேலை செய்வதற்கான அனுமதியையும் நிரூபிக்க வேண்டும். உயிர்த் தகவல்கள் கொண்ட அட்டை .இதனை நிருபிக்கும் வேறு அடையாள ஆவணங்களை எடுத்து வரும்படி நீங்கள் கேட்கப்படலாம். எவ்வாறான தகவல்களை எடுத்து வரும்படி தெரிவிக்கும் ஒரு கடிதம் உங்களுக்கு தரப்படும்.

## 4A.5 ஒன்றிணைதலுக்கான கடன் பற்றிய விபரங்கள்

உங்களுக்கு மனிதாபிமான அடிப்படையில் பாதுகாப்பு அல்லது அகதி அந்தஸ்து கிடைத்து இருந்தால் "ஒன்றிணைதலுக்கான கடன்" ஒன்றிற்கு நீங்கள் விண்ணப்பிக்கலாம். ஒன்றிணைதலுக்கான கடன் ஏ்னபது Home Office இனால் ஒன்றிணைதலின் ஆரம்ப கட்டத்தில் உதவி செய்யும் முகமாக ஏற்படுத்தப் பட்ட கடன் திட்டம். ஒன்றிணைதலை ஊக்குவிக்கம் நடவடிக்கைகள் மற்றும் பொருட்களுக்கன இக்கடனை உபயோகிக்க முடியும்.

- Job Centre Plus ஊடாக பெறமுடியாத தொழில் பயிர்ச்சிகள் உங்கள் Job Centre ஆலோசகருடன் இதுபற்றி கலந்து உரையாட வேண்டும்
- தங்குமிடத்திற்கான வைப்புப் பணம்
- வீட்டிற்கு தேவையான அத்தியாவசியப் பொருட்கள் அல்லது
- தொழிலுக்கான கருவிகள்

உங்களுக்க வங்கிக் கணக்கு ஒன்று இல்லை என்றால் ஆகக் கூடுதலாக £450.00 மட்டுமே விண்ணப்பிக்கலாம். ஆகவே கூடுதலான தொகைக்கு விண்ணப்பிக்க வேண்டும் என்றால் வங்கிக் கணக்கு ஒன்றைத் திறக்க வேண்டும். வேலை மற்றும் ஓய்வூதியத் திணைக்களத்தினால் கிரமமான தவணைகயில் இக்கடன் தீரும்பப் பெறப் படவேண்டும் உங்கள் கொடுப்பனவில் இருந்து நேரடியாக அல்லது உங்கள் வங்கிக் கணக்கில் இருந்து நேரடியாகக் கழிக்கப்படும். அனேகமான சந்தர்ப்பங்களில் ஒரு நபருக்கு பணம் வழங்கப் பட்டு ஆறு வாரங்களுக்கு பின்னர் பணம் திரும்பப் பெறுதல் ஆரம்பமாகும் உங்களுக்க பணம் வழங்கப் படுவதற்கு முன்னர் ஒரு கடன் உடன்படிக்கையல் கைசாத்திட வேண்டும். தேசிய காப்புறுதி இலக்கம் ஒன்று இல்லாமல் உங்களால் ஒன்றிணைதலுக்கான கடனைப் பெற முடியாது. இது இல்லாமல் விண்ணப்பம் செய்யும் பட்சத்தில் பூரணமற்றது என நிராகரிக்கப்பட்டு உங்களிடம் திருப்பி அனுப்பப் படும். மேலும் விபரங்கள் அறிய https://www.gov.uk/refugee-integration-loan/overview

## 4A.6 NASS 35

நீங்கள் Home Office இல் இருந்து உதவி பெறுபவர் ஆயின் உங்களுக்கு ஒரு 4.A6 NASS 35 கிடைக்கும் உங்களுக்க கிடைக்கும் ஆதரவு பற்றிய விபரங்கள் மற்றும்

உங்கள் புகைப்படத்தையும் கொண்டிருக்கம் இந்த A4 அளவிலான மென்தகட்டு ஆவணம். Home Officė இல் இருந்து இது உங்களுக்க அனுப்பி வைக்கப் படும் நீங்கள் பெற்ற உதவி மற்றும் எப்போ அது நிறுத்தப்படும் என்பதை இது ஊர்ஜிதம் செய்யும். உங்களுக்கோ அல்லது உங்கள் சட்ட ஆலோசகருக்கோ Home Officė முடிவினைத் தெரிவித்த திகதியில் இருந்து 28 நாட்களில் சகல உதவிகளும் நிறுத்தப் படும். NASS 35 விண்ணப்பிக்க உதவி வேண்டுமானால் புகலிட உதவி மையத்தை அணுகவும் 0808 8000 630

## 4.A7 நான் எவ்வாறு என்னையும் எனது குடும்பத்தையும் ஆதரிப்பது?

உங்கள் அந்தஸ்து பற்றி Home Office தெரிவித்து 28 நாட்களின் பின்னும் உங்களுக்கு ஆதரவு வழங்கும் கடப்பாடு அதற்கு கிடையாது Home Office இல் இருந்தும் உங்களுக்கு தங்குமிடம் வழங்குபவரிடம் இருந்தும் (நீங்கள் Home Office இல் இருந்து ஆதரவு பெறுபவர் ஆயின்) எத் திகதியில் இருந்து உங்களுக்கான ஆதரவு நிறுத்தப்படும் என்றும் எந்தத் திகதியில் தங்குமிடத்தை விட்டு அகல வேண்டும் உறுதிப்படுத்தும் கடிதம் உங்களுக்கு கிடைக்கும். இந்தத் திகதிக்கு முன்னர் உங்கள் உடைமைகளை அகற்றுவதுடன் தங்குமிடத்தை விட்டு வெளியேற வேண்டும்.

## 4A.8 தங்குமிடம் : இங்கிலாந்து மற்றும் வேல்ஸ்

முன்னுரிமை கொண்ட தங்குமிடத் தேவை (அவசர அல்லது தற்காலிக வீடு) நிங்கள் வீடற்றவர் என்றால் உங்கள் உள்ளுர் சபைகளின் வீட்டுத் திணைக்களத்திடம் உதவி கேட்கலாம். நீங்கள் வசிக்கும் பகுதியில் உள்ள உள்ளுர் சபை உங்களுக்கு ஆலோசனையும் உதவியும் வழங்க சட்டப்படி கடமை உள்ளவர்கள். உங்களின் தனிப்பட்ட சூழலைப் பொறுத்து உங்களுக்கு தங்குமிடம் வழங்க வேண்டியிருக்கும்

உங்களுக்கு முன்னுரிமைத் தேவை உள்ளது என நீங்கள் கருதினால் (இக் காரணங்களுக்காக ) உங்கள் குடும்பத்தில் உள்ள குழந்தைகள், பாரிய உடல் அல்லது மன நோயாளிகள், வீட்டில் வன்முறைக்குள்ளாகும் அபாயம்) வீடுகளுக்கான அலுவலகம் உங்களுக்கு தங்குமிடம் வழங்க வேண்டியிருக்கும் விடற்றவருக்கான விண்ணப்பம ஒன்றை நீங்கள் சமர்ப்பிக்க வேண்டும் உள்ளுர் சபை இதனை மதிப்பீடு செய்து உங்களுக்கு தங்குமிடம் வழங்கும் கடப்பாடு உள்ளதா என பார்ப்பார்கள். நீங்கள் வீடற்றவரா,முன்னுரிமைத் தேவை உள்ளவரா, உங்கள் தெரிவின் அடிப்படையில் தான் வீடற்றவராக உள்ளீகளா அத்துடன் அல்லது உள்ளுர் தொடர்புகள் உண்டா என்பதை கணிப்பீடு செய்வார்கள்

உங்களுக்க முன்னுரிமைத் தேவை உள்ளது என உள்ளுர் சபை கணித்தால் அவசர அல்லது தற்காலிக வீடு வழங்குவார்கள் அவசரத் தங்குமிடம் என்பது அனேகமாக படுக்கையும் காலை உணவும் ஆக இருக்கம் அல்லது விடுதி சட்டப் படி குழந்தைகள் மற்றும் கர்ப்பிணிப் பெண்களை 6 வாரங்களுக்கு மேலாக படுக்கையும் காலை உணவும் கொண்ட தங்குமிடத்தில் தங்க வைக்க முடியாது நீங்கள் ஆலோசனை பெறுவதற்கு

Shelter- இவர்கள் வீடுகளுக்கான சகல உரிமைகள தொடர்பாக சுயாதீன ஆலோசனை வழங்குவார்கள். தொடர்பு கொள்ள: 0800 800 4444

உங்கள் பகுதியிலேயே ஒரு சுயாதீன வீடுகள் ஆலோசனை மையத்தைக் கண்டு பிடிக்க முடியும்.

ஒரு உள்ளூர் சபை நீங்கள் வீடற்றவர் என்பதை ஏற்றுக் கொண்டு உங்களுக்கு வீடு கிடைக்கச் செய்வது அவர்கள் கடமை என்பதையும் ஏற்றுக் கொண்டால் அவர்கள் உங்களுக்கு தர முன்வருவது

1) உள்ளூர் சபயின் குடியிருப்பு

2) வீட்டுச் சங்கத்தின் வீடுகள்

3) தனியாரிடம் இருந்து நீண்ட காலத்துக்கு வாடைகைக்கு எடுத்துக் கொண்ட தங்குமிடங்கள்

மேற் குறிப்பிட்ட தங்குமிட மாதிரி ஏதாவது ஒன்றை துருவதற்கு சபை முன்வரலாம். பொருத்தமான ஒன்றை கொடுக்க முனவருவதுடன் அவர்கள் கடமை முடிந்து விடும்.

உங்களுக்கு இத் தங்கு மிடம் பொருத்தமற்றது என் கருதினால் அதனை மறுப்பதற்கு முன்னர் சுயாதீன ஆலோசனையைப் பெறுவது முக்கியம். சபை தர முன்வரும் தங்குமிடத்தை நீங்கள் மறுத்து அது உங்கள் தேவைகளுக்கு பொருத்தமானது என்றால் உங்களுக்கு அவர்கள் செய்ய வேண்டிய கடமை முடிந்து விடும். உங்களுக்க கொடுக்கப் பட்ட அவசரகால தங்கமிடத்தை இரத்துச் செய்யலாம் ஏனெனில் “நீங்கள் வேண்டும் என்றே வீடற்றவராக” இருக்கிறீகள் என்று கருதப்படுவீர்கள்.

Shelter- உங்களுக்கு வீடுகளுக்கான சகல உரிமைகள தொடர்பாக சுயாதீன ஆலோசனை வழங்குவார்கள். தொடர்பு கொள்ள: 0800 800 4444

உங்கள் பகுதியிலேயே ஒரு சுயாதீன வீடுகள் ஆலோசனை மையத்தைக் கண்டு பிடிக்க முடியும

தனியார் தங்குமிடங்கள்
நீங்கள் முன்னுரிமைத் தேவை அற்றவர் எனக் கருதப்பட்டால் தனியார் வாடைகை தங்குமிடங்களைப் பார்க்க வேண்டும். உங்களுக்கு முன்னுரிமைத் தேவை உள்ளது ஆனால் அது சபையினால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்றால் நீங்கள் மேன் முறையீடு செய்யலாம். இவ்வாறான சூழல்களில் நீங்கள் சுயாதீன சட்ட ஆலோசனை பெற வேண்டும்.

ஒரு தங்குமிடத்தை உறுதி செய்வதற்கு அனேகமாக வடைகைக்கு விடுபவர் ஒரு வைப்புத்தொகை பணமும் ஒரு மாத வாடைகையும் கேட்பார்கள் இது தொடர்பாக உங்கள் பகுதியில் ஏதாவது உதவி பெற முடியுமா என்பது பற்றி உள்ளூர் வீட்டு முகவர்களிடம் இருந்து தெரிந்து கொள்ளலாம். உதாரணமாக உள்ளூர்

ஒப்பந்தம் அல்லது வாடகை வைப்புத் தொகை வழிகள் இது தொடர்பில் நீங்கள் ஒன்றிணைதலுக்கான கடனுக்க விண்ணப்பிக்கலாம்

வீதி வீடற்றவர்கள்
நீங்கள் வீதில் வீடற்றவர் என்றால் உங்களுக்க உதவி புரிவதற்கு முன்வரக்கூடும் உங்கள் பகுதயில் அமைப்புகள் இருக்கும் தயவு செய்து உங்கள் அருகாமையில் உள்ள நிறுவனங்களின் விபரங்களை உங்கள் நகராட்சி கொடுத்து உதவ கூடும் அல்லது இரவு அடைகளம் வழங்குபவர்கள் உதவலாம் . இது ஒருவேளை உறங்க இடம் , உண்ண உணவு மற்றும் போர்வை போன்ற வைகளாக இருக்கலாம்

நீங்கள் SHELTER ஐ தொடர்பு கொள்ளலாம் அவர்கள் வீடுகள் தொடர்பாக சுயாதீன ஆலோசனை வழங்குவார்கள். தொடர்பு கொள்ள: 0800 800 4444

நீங்கள் பெறக்கூடிய சேவைகள்

பகல் சேவைகள் உணவு, உடை, குளியல் வசதிகள் கிடைப்பதற்கு உதவி செய்வார்கள் சுயாதீன ஆலோசனை வழங்குவார்கள்.

அவசரத் தேவைக்கு விடுதிகள் மற்றும் இரவில் தங்குமிடங்கள்- நீங்கள் வீதியில் விடப்பட்டிருந்தால் ஓரிரு இரவுகளுக்கு தங்குவதற்கு இடம் கிடைக்கலாம்.

நீங்கள் 0300 500 0914 எனும் இலக்கத்தில் STREETLINK உடன் தொடர்பு கொள்ளலாம் அவர்கள் உங்களுக்கு ஆலோசனை வழங்குவார்கள்

## 4A.9 தங்குமிடம் ஸ்கொட்லாந்து

உங்குளுககு தங்க வேறு இடம் இல்லை என்றால் உள்ளூர் சபையின் குடியிருப்பு திணைக்களத்திடம் உதவி கேட்கலாம். நீங்கள் வசிக்கும் பகுதியின் உள்ளூர் சபை உங்களுக்கு சட்டப்படி உதவியும் ஆலோசனையும் தரவேண்டும். நீங்கள் வீடற்றவர் என்று விண்ணப்பம் செய்தால் உங்கள் தகைமையை கணிப்பீடு செய்யும் வலை அவசரத் தேவைக்கான ஆதரவு தரப்படும். உங்கள் பகுதியில் சபையினால் தங்குமிடம் கொடுக்க முடியாவிட்டால் உங்கள் பகுதிக்கு வெளியே தர முயற்சிப்பார்கள்

உங்களுக்கு உதவி செய்யும் கடப்பாடு தமக்கு உள்ளது என முடிவு செய்தால் நிரந்தர தங்குமிடத்தை ஒழுங்க செய்வார்கள் உங்களுக்கு ஒரு நிரந்தர தங்குமிடம் கிடைக்கும் வரை உங்கள் தற்காலிக தங்குமிடத்தில் தங்கலாம்

உங்களுக்கு நீணடகால உதவி செய்வதற்கு கடப்பாடு இல்லை என்றால் நிரந்தர தங்குமிடம் ஒன்று கிடைக்கம் வரை உங்கள் அவசரத் தேவைக்கான தங்குமிடத்தில் தங்கலாம். அவசரத் தேவைக்கான தங்குமிடத்தை சபை வழங்காவிட்டால் குடியிருப்பு ஆலோசனை முகவர்களைத் தொடர்பு கொள்ள வேண்டும்.

நீங்கள் வீடற்றவர் என்றால் அவசர குடியிருப்புத் தேவைகளுக்கு :

- விடுதிகள், இரவ தங்குமிடங்கள் மற்றும் குளிர்காலத் தங்குமிடங்கள்
- வீட்டு வன்முறை மற்றும் பெண்களுக்கான புகலிடம்.
- படுக்கையும் காலையுணவும் வழங்கும் ஹோட்டல்கள்

உள்ளூர் சபை மேலதிக தகவல்களை வழங்க முடியும் உள்ளூர் குடியிருப்பு ஆலோசனை முகவர்களிடம் இருந்து உதவி கோர வேண்டும். செலவீனங்களை ஈடுகட்டுவதில் உதவுவதற்கு குடியிருப்ப சலுகைகளுக்கு விண்ணப்பிக்கக் கூடியதாக இருக்கும். சில தங்குமிடங்களுக்கு விலை அதிகமாக இருக்கலாம் ஆகவே குடியிருப்பு சலுகையுடன் நீங்க எம் பணம் போட்டு வாடகையை செலுத்த வேண்டி வரும்.

முக்கிய குறிப்பு உங்கள் பகுதியில் விடுதிகள் மற்றும் இரவு தங்குவதற்கான இடங்கள் உள்ளனவா உள்ளூர் குடியிருப்பு திணைக்களம் அல்லது Housing Advice Centre ஊர்ஜிதம்செய்யும்

குடியிருப்பு பற்றி மேலதிகத் தகவல்களுக்கு Shelter ஐ 0800 800 4444 எனும் இலக்கத்தில் தொடர்பு கொள்க அவர்களால் உங்களுக்க சுயாதீன ஆலோசனையும் பொருத்தமான வேவைகளுக்க வழிகாட்டவும் முடியும்.

## 4A.10 தங்குமிடம் வட ஐயர்லாந்து

நீங்கள் வீடற்றவர் என்றால் உங்களுக்க உதவியும் ஆலோசனையும் வழங்க Northern Ireland Housing Executive(NIHE) க்கு சட்டரீதியான கடப்பாடு உண்டு

உங்கள் நிலைமையைப் பொறுத்து உங்களுக்க தங்குமிடம் வழங்குவார்கள்

நீங்கள் வீடற்றவருக்கான விண்ணப்பத்தை சமர்ப்பிக்க வேண்டும். ஜோ்நு உங்களுக்கு தங்குமிடம் வழங்கவதற்கு கடப்பாடு உண்டா என்பதனை மதிப்பீடு செய்வார்கள் நீங்கள் வீடற்றவரா,முன்னுரிமைத் தேவை உள்ளவரா, உங்கள் தெரிவின் அடிப்படையில் தான் வீடற்றவராக உள்ளீர்களா அத்துடன் அல்லது உள்ளூர் தொடர்புகள் உண்டா என்பதை கணிப்பீடு செய்வார்கள உங்கள் சூழ்நிலைகளை ஆராயம் வரை தற்காலிக தங்குமிடமிம் வழங்கப்படலாம்.

உங்களுக்க முன்னுரிமைத் தேவை உள்ளது எனக் கணிப்பீட செய்யப்பட்டால் (இதற்கான காரணம்) உங்கள் குடும்பத்தில் உள்ள குழந்தைகள், பாரிய உடல் அல்லது மன நோயாளிகள், வீட்டில் வன்முறைக்குள்ளாகும் அபாயம்) மற்றும் வேறு தகுதிகள் இருந்தால் NIHE நீங்கள் வாழ்வதற்கான தங்குமிடம் ஒன்றைக் கண்டுபிடிப்பதந்கு உதவ வேண்டும் குறைந்த பட்சம் இரண்டு வருடங்களுக்கு கிடைப்பதாக இருக்க வேண்டும். உங்களுக்க நிரந்தர தங்குமிடம் தர வேண்டியதில்லை. மேலதிக தகவல்களுக்கு NIHE I 03448 920 920 இல் அழைக்கவும்

## 4A.11 குடியிருப்பு சலுகைகள், உள்ளூர் புடியிருப்புக்கான கொடுப்பனவுகள் மற்றும் சபையின் வரிச்சலுகைகள்.

நீங்கள் ஒரு குறைந்த வருமானம் உடையவர் அல்லது நலன்புரி சலுகைகள் பெறுபவர் என்றால் உங்கள் வீட்டிற்கான முழு வாடகையை அல்லது பகுதியை செலுத்த உதவியாக குடியிருப்பு சலுகைகள் அல்லது உள்ளூர் குடியிருப்புக்கான கொடுப்பனவுகள் உங்களுக்கு கிடைக்கலாம். இதற்கு நீங்கள் சபையிடம் விண்ணப்பிக்க வேண்டும். சபை வரி தொடர்பாக உதவிக்கும் நீங்கள் விண்ணப்பிக்கலாம். அனேகமாக குடியிருப்பு சலுகைகள் அல்லது குடியிருப்பு உதவிக் கொடுப்பனவுகள் ஒரே படிவத்தில் (34) (35) இருக்கும்

## 4A.12 நலன்புரி சலுகைகள்

உலகளாவிய கடன் - இந்த அரசாங்கம் புதிதாக ஒரு முறை பண உதவியாக உலகளாவிய கடன் ஐ வேலை இல்லா அல்லது குறைந்த வருமானத்தில் உள்ளவர்களுக்கு அறிமுக படுத்துகிறது . இது வேலை தேடுபவர்களுக்கு படி மற்றும் வீட்டு உதவி போன்ற வைகலை இணைத்து ஒரே பண உதவியாக கொடுப்பது . இதனை சில படிகளாக அறிமுக படுத்துகிறார்கள் . நீங்கள் அதனை பெரும் அந்த இடங்களில் இருப்பவரா என்று அறிந்து கொள்ள உனிவெர்சல் கிரெடிட் மின் அஞ்சலுக்கு செல்லுங்கள் ----- ஏதேனும் கேள்வி இருந்தால் உனிவெர்சல் கிரெடிட் உதவி எண்ணுக்கு அழையுங்கள் 0345 600 0723 ( கட்டணம் உண்டு ) . உலகளாவிய கடன் பெற வாய்ப்பு இல்லாதவர்கள் , கீழ் கண்ட உதவிகளை கோரலாம்

வேலை தேடுவோர் சலுகைகள் (JSA)
தற்சமயம் வேலை தேடுபவர்களுக்கும் அல்லது சராசரியாக வாரத்துக்கு 16 மணித்தியாலங்களுக்கு குறைவாக வேலை செய்வோருக்குமான சலுகை இது.

நீங்கள் ஒரு வேலை தேடுவோர் உடனபடிக்கை அல்லது புதிதாக கோருபவர்களின் உறுதிநிலை படிவத்தை பூர்த்தி செய்ய வேண்டும். இது வேலை கிடைப்பதற்க என்ன செய்ய வேண்டும் என்பதை விபரிக்கும் உங்களுக்கு கிடைக்கும் உதவிக்கு பிரதி உபகாரமாக வேலை தேடுவதில் உங்களுக்கு உள்ள பொறுப்பு பற்றி கூறுகிறது.

வேலை தேடுவோர் சலுகை பெறுகையில் உங்களின் சகல வேலை தேடும் முயற்சிகளையும பதிவு செய்ய வேண்டும். உங்களது உறுதி மொழியை நீங்கள் காப்பாற்றா விட்டால் வேலைகள் மையம் (Job Centre.) உங்கள் சலுகைகளை இடைநிறுத்தும் அல்லது முற்றாக நிறுத்தும்.

வேலை மையத்தின ் (Job Centre.) பயிற்சி வகுப்புகளில் பங்கு பெறலாம். இதில் ஆங்கில வகுப்புகளும் அடங்கும் (ESOL). இதனை நீங்கள் Job Centre. உடன் கலந்துரையாட வேண்டும்

வருமான உதவி
வாழ்வதற்கு போதுமான பணம் இல்லாதவர்களுக்கு வழங்கப்படும் சலுகைதான் வருமான

உதவி (Income Support) இது வருவாய் சோதனை இடப்பட்டது அதாவது உங்களுக்கு எவ்வளவு வருமான உதவி கிடைக்க வேண்டும் என்பதை முடிவ செய்கையில் உங்களிடம் உள்ள பணத்தையும் கருத்தில் கொள்ளுதல்

இங்கிலாந்து, ஸ்கொட்லாந்து மற்றும் வேல்ஸ்
பின்வருவனவற்றில் எல்லாமுமே உங்களுக்கு பொருத்தமாக இருக்க வேண்டும்.

- 16 வயதில் இருந்து ஓய்வூதிய வயது மட்டும்
- கர்ப்பிணி அல்லது பராமரிப்பவர் 5 வயதுக்கு குறைந்த குழந்தை உள்ள தனிப் பெற்றோர் அல்லது சில சமயங்களில் நோய் அல்லது ஊனம் காரணமாக வேலை செய்ய இயலாதவர்
- வருமானம் அற்றவர் அல்லது குறைந்த வருமானம் உள்ளவர்.
- வாரத்துக்கு 16 மணித்தியாலங்களுக்கு குறைவாக வேலை செய்பவர்( அத்துடன் உங்கள் துணை 24 மணித்தியாலங்களுக்கு குறைவாக) .

வட ஐயர்லாந்து
வட ஐயர்லாந்தில் பின்வருவனவற்றில் எல்லாமுமே உங்களுக்கு பொருத்தமாக இருக்க வேண்டும்.

- 16 வயதில் இருந்து ஓய்வூதிய வயது மட்டும்
- குறைந்த வருமானம்
- உங்கள் சம்பளத்தைப் பொறுத்து வாரத்துக்கு 16 மணத்தியாலங்களுக்க குறைவாக வேலை செய்தல்
- முழுநேரம் கல்வி கற்றலில் இல்லாமல் (சில விதி விலக்குகள் உண்டு)
- வேலை தேடுவோருக்கான கொடுப்பனவு அல்லது வேலை மற்றும் உதவிச் சலுகை (Employment and Support Allowance) பெறாதாவர்
- £16,000 க்கு மேலாக சேமிப்பு இல்லாதவராக
- வட ஐயர்லாந்தில் வசிப்பவர்

அல்லது

- ஒரு தனி பெற்றோர்
- பெற்றோருக்கான அல்லது தந்தைக்கான விடுப்பு
- பராமரிப்பு வழங்குவபர்
- கடந்த ஒருவருடத்துக்குள் வந்து சேர்ந்த ஆங்கிலம் கற்கும் அகதி

வேலை மற்றும் உதவிச் சலுகை Employment Support Allowance (ESA)
சுகயீனம் அல்லது ஊனம் உள்ளவர்களுக்கும் வழங்கப்படும் பணம் இது. அதாவது

இவர்களால் வேலை செய்ய முடியாது அல்லது செய்யக் கூடிய வேலைகள் மட்டுப்படுத்தப் பட்டுள்ளது. இக் கொடுப்பனவைப் பெறும் பொழுது வேலை மையம் (Job Centre) பிரத்தியோகப் பயிற்சி பெற்ற ஆலோசகர் ஒருவரை தரும். பொருத்தமான வேலை ஒன்றுக்கு செல்வதற்கு பலதரப்பட்ட வேறு சேவைகளைத் தருவார்கள்.

கேள்விக் கொத்து ஒன்றை நிரப்பும் படி வுாந Job Centre உங்களைக் கேட்கக் கூடும் அல்லது வேலைத் தகமை பற்றிய கணிப்பீடு ஒன்றிற்கு போகும் படி கேட்கக் கூடும். வேலை ஒன்றைத் தேடி எடுப்பதற்கு உங்களால் முயற்சி எடுக்க முடியுமா அல்லது உங்கள் சுகயீனம் அல்லது ஊனம் வேலை செய்வதற்கு பெரும் தடையாக இருப்பதால் இம்முயற்சிகளை எடுப்பது நியாயமற்றதா என்பதையும் கணிப்பீடு செய்வார்கள்.

ஒரு வைத்தியரையோ அல்லது தாதியையோ பார்க்கும் படி கேட்டுக் கொள்ளப் படலாம். அவர் கணிப்பீடு ஒன்றைச் செய்து னுறீ. க்கு அனுப்பி வைப்பார் உங்கள் சுகயீனம் அல்லது ஊனம் நீஙகள் செய்யக் கூடிய வேலையின் அளவு மற்றும் மாதிரி யை எப்படிப் பாதிக்கின்றது என்பதையும் வேலை மற்றும் உதவிச் சலுகை நுஅிடழலஅநவெ யனெ ளுரீழசவ யுடடழறயஉந க்கு தகுதி உடையவரா என்பதையும் உறுதி செய்வார்கள்
இரண்டு விதமான நுளுயு: உள்ளன

வேலை சம்பந்தமான நடவடிக்கை (Work-Related Activity Group ) குழு இது எதிர்காலத்தில் நீங்கள் வேலை செய்யக் கூடியதாக இருக்கும் என னுறீ கருதினால் Job Centre தாம் அழைக்கம் வேலை சம்பந்தமான நேர்காணலில் பங்கு பெறுவீர்கள் என எதிர்பார்க்ககும் அத்துடன் வேலை சம்பந்தமான வேறு நடவடிக்கைகளில் பங்கு கொள்வீர்கள் எனவும் எதிர்பார்ப்பார்கள். இல்லாவிட்டால் உங்களுக்கான கொடுப்பனவு குறைக்கப் படும்.

ஆதரவுக் குழு (Support Group) அதாவது உங்கள் நிலைமை நீங்கள் செய்யக் கூடிய வேலையை மட்டுப்படுத்துகிறது என DWP முடிவு செய்துள்ளது நீங்கள் வேலை சம்பந்தமான நடவடிக்கை (Work-Related Activity Group ) அல்லது நேர்காணல்களில் பங்கு பெறலாம்.

குழந்தைகளுக்கான சலுகைகள் நீங்கள் குழந்தைகளுக்கான சலுகைகள் பெறமுடியும் உங்கள் குழந்தை :

- 16 வயதுக்கு குறைந்ததாக இருந்தால்
- 16க்கு மேல் ஆனால் 20க்கு குறைவாக அதே நேரம் குழந்தைகளுக்கான சலுகைகளை அனுமதிக்கும் கல்வி அல்லது பயிர்ச்சியில் இருக்க வேண்டும்
- 18 வயதுக்கு குறைவு அத்துடன் அண்மையில் கல்வி அல்லது பயிர்ச்சியை விட்டு விட்டவர்- ஆனால் வேலை, பயிர்ச்சி அல்லது கல்விக்காக ஊழநெெஓழைளெ வேலைவாய்பு சேவைகள் உள்ளுர் அதிகாரத்தின் சேவைகள் பாதுகாப்பு அமைச்சுஅல்லது இது போன்றவற்றில் பதிவு செய்யப் பட்டிருக்க வேண்டும்.

குழந்தைகளுக்கான சலுகைகள் பற்றி மேலதிக ஆலோசனை பெற விரும்பினால் 0300 200 3103 அழையுங்கள்

குழந்தைகள் வரிச் சலுகை

குழந்தைகள் உள்ள குறைந்த வருமானம் உடையவர்கள் அல்லது நலன்புரி சலுகைகள் பெறுவபர்களுக்கு குழந்தைகள் வரிச் சலுகை கொடுக்கப் படலாம்.

- 16 வயதுக்கு குறைந்தவர்- 16 வது பிறந்த நாளுக்குப் பின்னர் ஆகஸ்ட் 31ம் திகதி வரைக்கும் அதனை நீங்கள் கோரலாம்
- 20 வயதுக்கு குறைந்தவர்கள்- அங்கீகரிக்கப் பட்ட கல்வி கற்றலில் அல்லது பயிற்சியில் அவர்கள் உள்ளார்கள் என்றால்

ஒரு குழந்தைக்கு பொறுப்பு

வழக்கமாக நீங்கள் ஒரு குழந்தைக்கு பொறுப்பு அவர்கள்

- எப்பொழுதும் உங்களுடனேயே வசிப்பவர்கள் என்றால்
- உங்கள் பராமரிப்பின் கீழ் வழமையாக உங்களுடன் வசிப்பவர்
- ஐரோப்பாவில் வசிப்பவர் ஆனால் பொருளாதார ரீதியாக உங்களில் சார்திருப்பவர்

ஊனமுற்ற குழந்தை எனின்

மேலதிக குழந்தை வரிச் சலுகை நீங்கள் பெற முடியும் இக் குழந்தை

- ஊனம் காரணமாக மேலதிக சலுகைகள் பெறுகின்றது என்றால்
- குருடு எனப் பதிவ செய்யப்பட்டவர் அல்லது உங்கள் வரிச் சலுகைக் கோரிக்கை கொடுத்து 28 வாரங்களுக்குள்

Job Centre ஐ தொடர்பு கொள்ள

தொலை பேசி 0800 055 6688 / Textphone: 0800 023 4888

வீட்டுத் தொலைபேசியில் அழைத்தால் கட்டணம் இல்லை கைப்பேசி என்றால் கட்டணம் உண்டு Job Centre அலுவலகத்தில் கட்டணமற்ற தொலைபேசி உங்கள் பாவனைக்கு உண்டு இணையதளங்கள் ஊடாக சில விண்ணப்பங்களையும் செய்யலாம்.

குழந்தைகள் வரிச்சலுகை பற்றி மேலதிக தகவல்களுக்கு : 0345 300 3900 அல்லது செவிடு அல்லது கேட்டல் அல்லது பேச்சு குறைபாடு உள்ளவர்களுக்கு 0345 300 3909

ஓய்வூதிய சலுகைகள்

ஓய்வூதிய சலுகைகளுக்கு தகுதி பெற

- ஐக்கியராச்சியத்தில் வசிப்பவராக இருக்க வேண்டும்
- நீங்களோ உங்கள் துணையோ ஓய்வூதிய சலுகை பெறவதற்கான வயதை

அடைந்திருக்க வேண்டும்.

பெண்களுக்கு அரச ஓய்வூதியத்துக்கான வயதெல்லை 65 ஆகவும் ஆண்களுக்கு 66 ஆகவும் உயர்ந்ததற்கு ஏற்ப ஓய்வூதிய சலுகை பெறவதற்கான வயதும் மெதுவாக 66 எட்டுகிறது ஓய்வூதிய சலுகைக்கான தொடர்பு இலக்கம்
தொலைபேசி 0800 99 1234
வுநஓவிழுநெ: 0800 169 0133

திங்கள் இருந்து வெள்ளி காலை 0800 இல் இருந்து மாலை 0600 வரை

## 4A.13 வேறு சலுகைகள்

நீங்கள் நோயாளி என்றால் அல்லது உங்கள் வீட்டில் ஊனமுற்ற ஒருவர் இருக்கின்றார் என்றால் நீங்கள் யாரையாவது பராமரிக்கின்றீர்கள் என்றால் அல்லது உங்களை யாராவது பராமரிக்கின்றார்கள் என்றால் வயது முதிர்ந்தவர் என்றால் வேறு சலுகைகளுக்கு விண்ணப்பிக்கலாம்.

நீங்கள் Job Centre ஐ தொடர்பு கொண்டால் அவர்கள் ஆலேசனை வழங்குவார்கள் அல்லது சலுகைகளுக்கான உள்ளுர் நிபுணர்களின் ஆலோசனை பெறலாம். உங்கள் உள்ளுர் Citizens Advice Bureau உங்களுக்கு உதவி செய்வார்கள்

http://www.adviceguide.org.uk

## 4A.14 வேலைகள் வரிச் சலுகைகள்

நீங்கள் குறைந்த வருமானத்தில் வேலை செய்வபர் என்றால் வேலைகள் வரிச் சலுகைக்கு விண்ணப்பிக்கலாம்.

இதற்கு தகுதி பெற ஒரு குறிப்பிட்ட மணித்தியாலங்கள் நீங்கள் வேலை செய்வபராக இருத்தல் வேண்டும்

25 இல் இருந்து 59 வயது வரை - வாரத்துக்கு வேலை செய்யும் நேரம்-குறைந்தது 30 மணித்தியாலங்கள்

60 வயதுக்கு மேல் என்றால் - வாரத்துக்கு வேலை செய்யும் நேரம்-குறைந்தது 16 மணித்தியாலங்கள்

ஊனம் உற்றவர் உன்றால் வாரத்துக்கு வேலை செய்யும் நேரம்-குறைந்தது 16 மணித்தியாலங்கள்

ஒன்று அல்லது கூடுதலான குழந்தைகள் கொண்ட தனிப் பெற்றார் என்றால் வாரத்துக்கு வேலை செய்யும் நேரம்-குறைந்தது 16 மணித்தியாலங்கள்

ஒன்று அல்லது கூடுதலான குழந்தைகள் கொண்ட சோடி என்றால் வழக்கமாக குறைந்தது 24 மணித்தியாலங்கள் (இதில் உங்களில் ஒருவர் வாரத்துக்கு

குறைந்தது 16 மணித்தியாலங்கள் வேலை செய்வபர்)

விண்ணப்பிக்க அல்லது தகவல்கள் பெற தொடர்பு கொள்ள வேண்டியது

Tax Credit Helpline
Telephone: 0345 300 3900
Textphone: 0345 300 3909

## 4A.15 சலுகைகளின் எல்லை

ஒரு குடும்பம் அல்லது தனிநபர் பெறும் சலுகைகளின் மொத்த தொகையை வரையறை செய்வதற்கு நலன்புரி கொடுப்பனவுக்கு எல்லை விதிக்கப்பட்டுள்ளது. இது ஆகக் கூடியது

- தனிப் பெற்றார் அல்லது குழந்தைகள் உள்ள சோடிகளுக்கு வாரத்துக்கு £500
- தனி நபர்களுக்கு வாரத்துக்கு £350

மொத்த கொடுப்பனவுகள் எல்லை மீறிச் செல்லாமல் இருக்க குடியிருப்புச் சலுகைகள் குறைக்கப் படும்.
நீங்கள் வேலை அற்றவராக இருந்து வருமானத்துக்கான உதவி, வேலைவாய்புக்கான உதவி மற்றும் வேலை தேடுவேருக்கான உதவி போன்ற சலுகைகள் பெறுவபராயின் இவ் எல்லைகள் அமுல் படுத்தப்படும் கொடுக்கப் படக் கூடிய ஆகக்கூடிய தொகையில் குடியிருப்புக்கான சலுகையும் அடங்கும். இதனால் கூடிய வாடகை கொடுப்பவர்கள் அனேகமாகப் பாதிக்கப் படுவர். நீங்களோ அல்லது எங்கள் குடும்பமோ சில சலுகைகள் பெறுவபர்கள் என்றால் இந்த எல்லை வரையறையில் சேர்க்கப்பட மாட்டீர்கள் சில சூழ்நிலைகளில் இது அமூல் படுத்த மாட்டாது.

## 4A.16 ஐக்கிய ராச்சியத்தில் வேலை செய்தல்

உங்களுக்கு Biometric அட்டை கிடைத்ததும் வேலை செய்யலாம் ஆகக் குறைந்த ஊதியம் என்று ஒன்று தேசிய ரீதியில் ஐக்கியராச்சித்தில் உண்டு வேலை தருபவர் இந்த ஊதியம் கொடுப்பதை உறுதி செய்யுங்கள் முக்கிய குறிப்பு ஊதியம் தொடர்பாக பிணக்கு இருப்பின் சட்டவிரோதமான நடவடிக்கைகள் உள்ளது என்றால் உள்ளூர் குடிமக்கள் ஆலோசனை செயலகம் (Citizens Advice Bureau. ஐ) தொடர்பு கொள்ளவும்.

அண்மையில் உள்ள அலுவலகம் தொடர்பான தகவல்களை www.citizensadvice.co.uk இல் காணலாம்

வேலை தேடுதல்
நீங்கள் வேலை தேடுகின்றீர்கள் என்றால் உங்கள் உள்ளூர் வேலைகள் மையத்திற்கு (Job Centre) சென்று வேலை வாய்புகளின் பட்டியலைப் பெற்றுக் கொள்ளலாம்
உங்கள் பகுதியில் பல வேலைவாய்ப முகவர்கள் தங்களைப் பற்றி விளம்பரப் படுத்தி இருப்பார்கள்

பல தேசிய மற்றும் உள்ளூர் பத்திரிகைகள் வேலை வாய்ப்பு விளம்பரங்களைக் கொண்டிருக்கும் வேலை வழங்குபவர் குறைந்தபட்ச ஊதியத்தை வழங்குபவரகவும் நற்பெயர் உள்ளவராகவும் இருப்பதை உறுதி செய்து கொள்ளுங்கள்

வேலைக்கு விண்ணப்பித்தல்
எவ்வாறு வேலைக்கு விண்ணப்பிப்பது என்பது பற்றி வேலை வழங்குபவர்கள் விபரிப்பார்கள் பல வழிகள் உண்டு இதில் உங்களிடம் கேட்கப்படலாம்

1) A Curriculum Vitae இது பற்றி பல தடைவ கேள்விப் படுவீர்கள் இது பொதுவாக CV என அழைக்கப் படும ஒரு CV ஐ தரும்படி வேலை வழங்குபவர் கேட்கலாம் உங்கள் அனுபவம் மற்றும் தகமைகள் பற்றி மேலோட்டமாக இது விளக்கும். உங்கள் தனிப்பட்ட தகவல்கள், கல்வி அனுபவம். செய்த வேலைகளின் விபரங்கள் மற்றும் தொண்டு வேலைகள் உங்கள் உள்ளூர் வேலைகள் மையம் (Job Centre) இது தொடர்பில் உங்களுக்கு உதவி செய்வார்கள்

2) ஒரு வேலை விண்ணப்பப் படிவம்-அனேகமான வேலை வழங்குவபர்கள் ஒரு வேலை விண்ணப்பப் படிவத்தை நிரப்ப சொல்வார்கள் வேலை வழங்குபவர் உடன் தொலைபேசின் உடாக அல்லது மின்னஞ்சல் மூலம் தொடர்பு கொண்டு உங்கள் முகவரியைக் கொடுத்தால் உங்களுக்கு வேலைக்கான விண்ணப்பப் படிவத்தை அனுப்புவார்கள் இதில் வேலை சம்பந்தமான மேலதிக தகவல்கள் இருக்கும். அவர்கள் எதிர்பார்க்கும் தொழில் திறன் மற்றும் வல்லமை பற்றி வேலை விபரத்தில் இருக்கும். வேலைக்க விண்ணப்பிக்கும் பொழுது வெலை விபரத்தில் உள்ளவற்றுடன் எங்கள் தெழில் திறன் மற்றும் அனுபவம் ஒத்துப் பொக வேண்டும்.

3) ஒரு நேர்காணல் -உங்கள் விண்ணப்பத்தை ஒரு வேலை வழங்கபவர் பரிசீலனை செய்த பின்னர் உங்கள் தகமை பற்றி மேலும் கணிப்பதற்கு ஒரு நேர்காணலுக்கு வரும்படி அழைக்கலாம். இது ஒரு தனி நபருடன் அல்லது குழுவுடன் இருக்கலாம். உங்கள் விண்ணப்பம் தொடர்பாக, உங்கள் அனுபவம், தொழில் திறன் மற்றம் ஏன் உங்களுக்கு இந்த வேலை தேவை என்பது பற்றி கேள்விகள் கேட்பார்கள நீங்கள் செய்யப் போகும் வேலை எப்படிப் பட்டது மற்றும் வேலை வழங்கும் நிறுவனம் பற்றி நேர்காணலுக்கு முன்னர் ஆராய்ந்து அறிந்து வைத்திருப்பது நல்லது எவ்வாறான கேள்விகள் கேட்கப் படும் என்ன பதில்கள் கொடுபபீகள் என்பது பற்றி சிந்தியுங்கள்

வெற்றிகரமாக வேலை கிடைத்ததா?
வேலையை ஆரம்பிப்பதற்கு முன்னர் வேலை செய்வதற்கான அனுமதி பற்ற நிரூபிக்கம் படி வேலை வழங்குபவர் கேட்பார்கள் இதனை நிருபிப்பதற்க உங்கள் Biometric Card அட்டையைக் காட்ட வேண்டும் வேலை செய்ய ஆரம்பிப்பதற்கு வைத்திருக்கத் தேவை இல்லை என்றாலும் உங்கள் தேசிய காப்புறுதி இலக்கத்தையும் கொடுக்க வேண்டியிருக்கும் வரிகள் மற்றும் தேசிய காப்புறுதி உடனடியாக ஊதியதில் இருந்து கழிக்கப் படும். நீங்கள் ஒன்றுக்கு மேல்பட்ட வேலைகள் செய்பவராக இருந்தால் வேலை வழங்குபவருக்கும் வரித்துறைக்கும் தெரிவிக்க வேண்டும்.அவர்கள் உங்கள் வரிக் குறியீட்டை (வுயஒ ஊழனந) மாற்றி, குறைவான வரி கட்டுவதை தவிர்ப்பர்

சுயதொழில் ∴ சிறு வியாபாரம்
சுய தொழில் ஒன்றை அல்லது சிறு வியாபாரம் ஒன்னை ஆரம்பிக்க நீங்கள் விரும்பலாம். பலர் இதை வெற்றிகரமாக செய்கின்றனர் உங்களுக்கு இதில் உதவி வெய்யும் பொருட்டு கடன் அல்லது உதவித்தொகைக்கு விண்ணப்பிக்க தகதி உடையவராக இருக்கலாம். இதனைச் செய்வதற்கு எவ்வித உதவிகள் உள்ளன என அறிவதற்கு உள்ளுர் குடிமக்கள் ஆலோசனை செயலகம் (Citizens Advice Bureau) இடம் ஆலோசனை பெறலாம்
உங்கள் வரி மற்றும் தேசிய காப்புறுதி தொடர்பாக வரித்துறையிடம் பேச வேண்டும்.

உங்கள் தகமைகளை இடமாற்றம் செய்தல்
ஐக்கிய ராச்சியத்தில் அங்கீகரிக்கப் படாத தகமைகள் உங்களுக்கு இருந்தால் பின்வரும் அமைப்புகள் உங்களுக்க உதவி செய்யக் கூடும்.

NARIC Free Advice:
நீங்கள் ஒரு அகதியாக இருந்தால் உங்கள் தகமை பற்றி இலவச ஆலோசனை பெற அழைக்க வேண்டிய தொலைபேசி இலக்கம் 0870 990 4088

## 4A.17 பிரித்தானியக் குடியுரிமைக்கான உரிமை

விண்ணப்பிப்பதற்கு முன்னர் ஏழு நிபந்தனைகள் உள்ளன திருப்தி செய்வதற்கு

- 18 வயதுக்கு மேற்பட்டவராக இருக்க வேண்டும்.
- உளநலம உள்ளவராக இருக்க வேண்டும். (உங்கள் நடவடிக்கைகளை முழுமையாக புரிந்து கொள்ள)
- நீங்கள் UK இல் தொடர்ந்து வசிக்க விருப்பம் கொண்டவர், அல்லது தொடர்ந்து முடிக்கு உரிய சேவை செய்பவர், UK அங்கத்தவராக இருக்கும் ஒரு சர்வதேச அமைப்பில் சேவை செயபவர் அல்லது UK இல் உருவாக்கப் பட்ட எதாவது ஒரு நிறுவனம் அல்லது சங்கத்தில் சேவை செய்பவர் ஆக இருத்தல் வேண்டும்.
- ஏற்றுக் கொள்ளும் அளவுக்கு ஆங்கிலம், வெல்‘, அல்லது ஸ்கொட்டி‘ மொழிகளில் தொடர்பு கொள்ளக் கூடியவாராக இருத்தல் வேண்டும்.
- UK இல் வாழ்க்கை பற்றி போதிய அறிவு இருத்தல் வேண்டும்
- நற்பண்பு மிக்கவராக இருத்தல் வேண்டும்.
- வதிவிடத்துக்கான தகமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.( கீழே பார்க்கவும்.)

பிரித்தானிக் குடியுரிமைக்கு குடிவரவின் கால வரையறைகள்
இயற்கைமயப்படுத்தல் ( வெளிநாட்டவர் ஒருவருக்கு குடியுரிமை வழங்கும் நடவடிக்கை) க்க விண்ணப்பிக்கும் பொழுது கால வரையறைகள் எதுவும் அற்றவராக இருத்தல் வேண்டும். வதிவிடத் தகமைக்கான காலத்தின் கடந்த 12 மாதங்களுக்கு குடிவரவின் கால வரையறைகள் அற்றவராக இருத்தல் வேண்டும். அதாவது உங்களுக்கு காலவரையின்றி தங்குவதற்கு அனுமதி கிடைத்து 12 மாதங்களுக்கு பின்னர்

விண்ணப்பிக்கலாம்.

வதிவிடத் தகமைக்கான காலம் முழுவதும் UK இல் இருந்திருக்க வேண்டும் இக்காலத்தில் குடிவரவுச் சட்டங்களை மீறி இருந்தீர்கள் என்றால் இயற்கைமயப்படுத்தலுக்கான உங்கள் விண்ணப்பம் நிராகரிக்கப்படலாம். இச்சட்ட மீறல்களுக்கான காரணங்களைப் பொறுத்து வதிவிடத் தகமையை நிாணயிப்பதில் தற்துணிவுடன் செயல்படலாம்.

UK க்கு வெளியே கழித்த காலம்
விண்ணபத்தைக் கொடுப்பதற்கு முன்னரான ஐந்து வருட காலத்தில் UK யுக்கு வெளியே 450 நாட்களுக்கு மேலாக இருந்திருக்கக் கூடாது.

விண்ணபத்தைக் கொடுப்பதற்கு முன்னர் 12 மாதங்களுக்கு UK யுக்கு வெளியே 90 நாட்களுக்கு மேலாக இருந்திருக்கக் கூடாது.

இவ் வதிவிட நிபந்தனைகளை நீங்கள் திருப்தி செய்யாவிட்டால் ஆனால் உங்கள் விடயத்தல் அதற்கு வீசேட சூழல் நிலவியது என்று கருதினால் விண்ணப்பிக்கம் பொழுது அதனை விளக்க வேண்டும்.

நற்பண்பு
நற்பண்பு மிக்கவர் என்றால் UK யின் சட்ட திட்டங்களை மதித்துள்ளீர்கள் என்பதைக் காட்ட வேண்டும். கிரிமினல் குற்றவாளி என்றால் நற்பண்பு உடையவர் எனக் கருதப்பட மாட்டீர்கள் இது சிறைத் தண்டனை, அபராதங்கள் அல்லது சமூக சேவை ஆகியன உள்ளடங்கலாக இவை அனைத்தும் காலாவாதி ஆகும் காலம் வரை குடியுரிமை வழங்கப்பட மாட்டாது. இந்தக்காலம் ஆனது உங்கள் தண்டனைக் காலம் முடிவடைந்து அதன் பதிவுகள் பதிவேட்டில் இருந்து அகற்றப் படும் வரையிலான காலம் ஆகும் 3 இல் இருந்து 15 வருடமாக இது இருக்கலாம் 4 வருடங்களுக்கு அல்லது அதற்கு மேலாக தண்டனை பெற்றவர்களுக்கு வுாந Home Office குடியுரிமை வழங்குவது சாத்தியம் அற்றது

குழந்தைகளுக்கு பிரித்தானியக் குடியுரிமை
அண்மையில் காலவரையின்றித் தங்குவதற்கு (ILR)இ அனுமதி பெற்றவர் என்றால் அத்துடன் இதற்க முன்னர் ரும யில் பிறந்த குழந்தை ஒன்று உங்களுக்கு உண்டென்றால் அதனை பிரித்தானியக் குடிமகனாகப் பதிவு செய்யலாம்.

காலவரையின்றித் தங்குவதற்கு (ILR)இ அனுமதி பெற்ற பின் பிறந்த குழந்தை எனின் அக்குழந்தை பிறப்பில் இருந்தே பிரித்தானியர் ஆவார். மேலும் விபரங்களுக்கு இனைய தளத்தை https://www.gov.uk/becoming-a-british-citizen/check-if-you-can-apply பாருங்கள் . குறிப்பு : குடி உரிமம் விண்ணப்பிக்க வேறு வேறு கட்டணங்கள் வசூலிக்கப்படும்

## 4A.18 குடும்பங்கள் மீள் இணைதல்

மனிதாபிமானப் பாதுகாப்பு வழங்கப்பட்ட ஒருவர் அல்லது அகதி அந்தஸ்து பெற்ற ஒருவர் என்றால் குடும்ப மீள் இணைதலுக்கு விண்ணப்பிக்க தகுதி உள்ளவராவீர்கள். குடும்ப மீள் இணைதல் என்பது முன்பிருந்த குடும்ப அங்கத்தவர் ஒருவர் உங்களுடன UK க்கு வந்து சேருதல் உங்களுக்கு வழங்கப் பட்ட அனுமதியின் அதே நிபந்தனைகளின் கீழ் உங்களுடன் இணைய முடியும்.

இவை உள்ளடங்கலாக தாரம், குடியியல் துணை, அத்துடன் திருமணமாகாத ∴ அதே பால் துணை இதில் நீங்கள் தப்பி வரும் போது உங்கள் குடும்பத்தின் ஒரு பகுதியாக இருந்த, உங்களில் தங்கியிருந்த 18 வயதுக்கு குறைந்த குழந்தைகள் அடங்கும். இதில் நீங்கள் வெளியேறுவதற்கு முன்னர் கர்ப்பத்தில் இருந்த குழந்தைகளும் அடங்கும்

குடிவரவுச் சட்டங்களுக்கு புறம்பாக கவனத்தில் கொள்வதற்கு கருணை அடிப்படையிலான காரணங்கள் இருந்தால் வேறு குடும்ப அங்கத்தவர்களுக்கு குடும்ப மீள் இணைதலுக்கு அனுமதி Home office வழங்கலாம் இது குறித்த மேலும் விபரங்களுக்கு ஹோம் ஆபீஸ் இனைய தளத்தை https://www.gov.uk/settlement-refugee-or-humanitarian-protection/family-reunion பாருங்கள் .

## 4A.19 ஆங்கில வகுப்புகள்

உங்களின் ஆங்கிலத் தகமையை முன்னேற்ற விரும்பலாம். ரும யில் வாழ்க்கை பற்றியும் உள்ளுர் சமூகத்துடன் ஒன்றிணைதலுக்கும் இது ஒரு சிறந்த வழி. வேலை தேடுவதற்கு, படிப்பதற்கு, நாளாந்த வாழ்க்கைக்கு உதவ மற்றும் மற்றவர்களுடன் பழக ஆங்கிலம் கற்க நீங்கள் விரும்பலாம். ESOL . (பிற மொழி பேசுபவர்களுக்கு ஆங்கிலம்) வகுப்புகளுக்கு நீங்கள் செல்லலாம் உங்களுக்கு ஏற்ற தரத்தில் ஆரம்பிக்கலாம். உங்களின் ஆங்கிலத் தரம் எப்படி உள்ளது என்பது கணிக்கப் பட்டு அதுக்கேற்ற தரத்தில் அனுமதிக்கப் படலாம். நீங்கள் கற்பது

- உரையாடல் ஆங்கிலம்
- கேட்கும் ஆங்கிலம்.
- எழுதும் மற்றும் வாசிக்கும் ஆங்கிலம்
- சொல் வளம்
- குறிகள் மற்றும் இலக்கணம்

ஒரு ESOL வகுப்புக்கு விண்ணப்பிக்க உள்ளுரில் உள்ள தொடர்ந்து கற்றலுக்கான பாடசாலை ஒன்றை தொடர்பு கொள்ள வேண்டும்.

தகுதியான ESOL வகுப்பை நடாத்தும் பாடசாலையைக் கண்டு பிடிப்பதில் சிரமம் என்றால் உங்கள் உள்ளுர் Job Centre Plus ஐ உதவிக்கு நாடவும்.

நான் பணம் செலுத்த வேண்டுமா?

இங்கிலாந்து
நீங்கள் வேலை தேடுவோர் கொடுப்பனவில் (Job Centre Plus) உள்ளவர் அல்லது தொழில் வாய்பின் அடிப்படையில் ESA பெறபவர் என்றால் இலவச ஆங்கில வகுப்புகளுக்கு செல்ல முடியும் வேல்ஸ் : வேல்சில் ESOL இலவசமாக கற்றுகொடுக்க படுகிறது

ஸ்கொட்லாந்து
இவை மூலம் ஆங்கில வகுப்புகளுக்கான நிதிக்க விண்ணப்பிக்கலாம்

- உயர் கல்வியில் (HE) கட்டணங்கள் மற்றும் மாணவருக்கான உதவி
- மேலதிக கல்வியில் (FE) கட்டணங்களை தளர்த்தல் மற்றும் சுயவிருப்பு உதவித் தொகை

வகுப்பு தொடங்கும் முதல் நாளில் நீங்கள் ஒரு சாதாரண வதிவிடவாளர் என்றால் இதனைச் செய்ய முடியும்.

ஸ்கொட்லாந்தில் சாதாரண வதிவிடவாளருக்கான நிபந்தனைகளை பூர்த்தி செய்யும் உங்கள் தாரம், குடியியல் துணை அல்லது குழந்தை இவர்களும் தகுதியானவர்கள் நீங்கள் ஒருதனிப்பட்ட கற்றல் கணக்கு (Individual Learning Account) அல்லது ஒரு கல்வி பராமரிப்பு உதவித் தொகைக்கு (Education Maintenance Allowance.) விண்ணப்பிக்கலாம்